# வேர்ட்ஸ்மித் சிகரம்

**SECONDARY 2 - BEST MODEL COMPO & EMAIL WRITING PRACTISE TO JUMP GRADE**

**உயர்நிலை 2 - சிறப்புத் தேர்ச்சிக்கான தேர்வுத் தலைப்பையொட்டிய கட்டுரை & மின்னஞ்சல் மாதிரிகளோடு பயிற்சிகள்**

## பொருளடக்கம்


| எண் | தலைப்பு | கருப்பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| **தொகுதி 1** | | | |
| 1 | ராகவனும் மோகனும் ஒரே வகுப்பில் பயின்று வரும் நல்ல நண்பர்கள். ராகவனுக்கு வகுப்புத் தலைவனாக ஆக வேண்டும் என்ற பேராசை வெகு நாட்களாக இருந்தது. தலைவனாக இருந்தால்தான் எல்லோரும் தனக்கு மரியாதை செலுத்துவார்கள் என்று மனக்கோட்டைக் கட்டினான். . . . . | வகுப்புத் தலைவனாக பேராசை - கற்றுணர்ந்த பாடம் | 1 - 3 |
| 2 | நீ மேற்கொண்டுவரும் ஒரு பொழுதுபோக்கினால் விளைந்த நன்மைகளைப் பற்றி விளக்கி எழுதவும். | பொழுதுபோக்கினால் அடைந்த நன்மை | 4 - 7 |
| 3 | “அப்பா, தாத்தாவும் பாட்டியும் நம்முடனே இருக்கட்டுமே! அவர்கள் இந்தியாவில் தன்னந்தனியாக எப்படி வாழ்வார்கள்?” என்று கேட்கும்போது என்னை அறியாமலே கண்கள் குளமாகின. அவர்களுடன் கழிந்த இந்த ஒரு மாத கால விடுமுறைதான் என் வாழ்க்கையிலேயே இனிமையான தருணங்கள் எனலாம். . . . | தாத்தா பாட்டியின் மகிமை | 7 - 8 |
| **தொகுதி 2** | | | |
| 4 | .“இங்கு எதற்கு இவ்வளவு பேர் கூடியிருக்கிறார்கள்? நீ எதற்காக என்னை இங்கு அழைத்து வந்தாய் சிவா?” என்று கூட்டத்தின் மீது செலுத்திய பார்வையை விலக்காமலே கேள்விகளைத் தொடுத்தவாறு நெருங்கினான் ரமேஷ். அதே வினா என்னுடைய சக நண்பர்களுக்கும் தத்தம் மனதில் எழுந்து அவர்களின் முகபாவத்தின் மூலம் வெளிப்பட்டது. . . . . | பேச்சுப் போட்டி - அபார வெற்றி | 9 - 11 |
| 5 | உனக்கு மிகவும் பிடித்த பிரபலத்தை நேரில் கண்ட அனுபவத்தையும் உனக்கு ஏற்பட்ட உணர்வையும் விவரித்து எழுதுக. | திரு ரஜினிகாந்தை நேரில் கண்ட அனுபவம் | 12 - 16 |
| 6 | ஒரு மாணவருக்குச் சுய ஒழுக்கம் மிகவும் முக்கியம் என்பதை உனக்கு உணர வைத்த சம்பவத்தை விவரித்து எழுதுக. | சுய ஒழுக்கம் - உணர்ந்த சம்பவம் | 16 - 18 |

| | | | |
|---|---|---|---|
| 24 | "சிங்கப்பூர் செல்லும் அனைத்து விமானங்களும் ரத்துச் செய்யப்பட்டன" என்ற அறிவிப்பைக் கேட்டதும் எங்கள் தலையில் இடி விழுந்தாற்போல் இருந்தது. இனிமையான சுற்றுப்பயணத்தின் இறுதியில் இப்படியொரு துன்பம் நிகழுமென கனவில்கூட நினைத்துப் பார்க்கவில்லை. எங்களின் முகத்தில் குழப்பம் நிழலாடியது. . . . . | சுற்றுப்பயணத்தில் நிகழ்ந்த துன்பம் | 73 - 74 |
| **தொகுதி 9** | | | |
| 25 | கொவிட்-19 சூழலால் உன் கல்வியில் ஏற்பட்ட திடீர் மாற்றங்களைப் பற்றிய அனுபவத்தை விவரித்து எழுதுக. | கொவிட் - 19 - கல்வியில் ஏற்பட்ட மாற்றம் | 75 - 77 |
| 26 | உனக்கு 24 மணி நேரம் சுதந்திரம் கொடுத்தால் நீ என்னென்ன செய்ய விரும்புவாய் என்பதை விவரித்து எழுதுக. | 24 மணி நேரம் - செய்ய விரும்பும் செயல் | 78 - 81 |
| 27 | உறவினர் வீட்டு நிகழ்வுக்குச் சென்ற போது உனக்கு ஏற்பட்ட மறக்க முடியாத சம்பவத்தைப் பற்றி விவரித்து எழுதுக. | உறவினர் வீட்டில் மறக்க முடியாத சம்பவம் | 82 - 83 |
| **தொகுதி 10** | | | |
| 28 | பள்ளி முடிந்து மாணவர்கள் துள்ளியோடும் புள்ளிமான்கள்போல மகிழ்ச்சியுடன் வீட்டிற்குக் கிளம்பினர். நானும் விரைவாக வீட்டிற்குச் சென்று உடைகளை மாற்றி திடலுக்குச் செல்லலாம் என்று எண்ணியவாறே சிங்கநடை போட்டு வீட்டிற்கு நடந்தேன். ஆனால், நான் நினைத்தது ஒன்றாய் நடந்தது வேறொன்றாய்ப் போனது. . . . . | மகனால் பெருமையுற்ற பெற்றோர்கள் | 84 - 86 |
| 29 | உனக்குள் மறைந்துகிடந்த திறனைக் வெளிக்கொண்டு வர உனக்கொரு வாய்ப்புக் கிடைத்தது. அது எவ்வாறு நடந்தது என்றும் அதன்மூலம் உனக்குக் கிடைத்த அனுபவத்தையும் மனநிலையையும் விவரித்து எழுதுக | திறனை வெளிப்படுத்திய அனுபவம் | 87 - 91 |
| 30 | உன் உயிர் தோழனுக்கு ஏற்பட்ட பாதிப்பால் நீ அடைந்த பெருந்துயரத்தைப் பற்றிய அனுபவத்தை விவரித்து எழுதுக. | நண்பனுக்கு விபத்து - பெருந்துயரம் அடைதல் | 92 -93 |

## வேர்ட்ஸ்மித் சிகரம்

### பொருளடக்கம் - மின்னஞ்சல்


| பயிற்சி வினா | மின்னஞ்சல் வகை | தலைப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 1 | அறிவுரை கூறுதல் | பொதுப் போக்குவரத்து | 94 |
| 2 | வழிகாட்டுதல் | வெளிநாட்டு மாணவர் வருகை | 94 |
| 3 | அழைப்பு விடுத்தல் | வெள்ள நிவாரணத்திற்கு நன்கொடை | 95 |
| 4 | தகவல் தெரிவித்தல் | பசுமை தினம் | 95 |
| 5 | நன்றி தெரிவித்தல் | நீச்சல் போட்டியில் வெற்றி | 96 |
| 6 | பகிர்தல் | கைவிடப்பட்ட பிராணிகளுக்கான காப்பகம் | 96 |
| 7 | ஆலோசனை கேட்டல் | மாணவர் தலைவன் | 97 |
| 8 | அறிவுரை கூறுதல் | தம்பியின் மீது பொறாமை | 98 |
| 9 | மன்னிப்புக் கேட்டல் | முன்னாள் மாணவர் சந்திப்பு | 98 |
| 10 | பாராட்டுத் தெரிவித்தல் | திருக்குறள் மனனப் போட்டி | 99 |
| 11 | தகவல் தெரிவித்தல் | சிங்கப்பூரில் கொவிட்-19 தடுப்பு முறை | 100 |
| 12 | பகிர்ந்து கொள்ளுதல் | வகுப்பறை அலங்காரம் | 101 |
| 13 | வழிகாட்டுதல் | சேமிப்பு | 102 |
| 14 | மன்னிப்புக் கேட்டல் | மீன்தொட்டி உடைதல் | 102 |
| 15 | அறிவுரை கூறுதல் | உடல் பருமன் | 103 |
| **விடைத்தாள்** | | | |
| 1 | மாதிரிக் கட்டுரை விடைத்தாள் | | 104 - 114 |
| 2 | மின்னஞ்சல் விடைகள் | | 115 - 137 |

# தொகுதி 1

**<u>மாதிரிக் கட்டுரை (Model Compo) 1</u>**

**கீழ்க்காணும் வினாவில் தொடக்கவரிகளைப் பயன்படுத்தி கதையை முடித்தெழுதுக.**

**1.** ***ராகவனும் மோகனும் ஒரே வகுப்பில் பயின்று வரும் நல்ல நண்பர்கள். ராகவனுக்கு வகுப்புத் தலைவனாக ஆக வேண்டும் என்ற பேராசை வெகு நாட்களாக இருந்தது. தலைவனாக இருந்தால்தான் எல்லோரும் தனக்கு மரியாதை செலுத்துவார்கள் என்று மனக்கோட்டைக் கட்டினான். . . . .***

ராகவனும் மோகனும் ஒரே வகுப்பில் பயின்று வரும் நல்ல நண்பர்கள். ராகவனுக்கு வகுப்புத் தலைவனாக ஆக வேண்டும் என்ற பேராசை வெகு நாட்களாக இருந்தது. தலைவனாக இருந்தால்தான் எல்லோரும் தனக்கு மரியாதை செலுத்துவார்கள் என்று *மனக்கோட்டைக் கட்டினான்.* அதற்காகத் தன்னுடன் பயிலும் சக மாணவர்களைத் தன் வசம் ஈர்த்துக் கொள்வதற்குப் பல *திட்டங்களைத் தீட்டினான்.*

எல்லோரிடமும் அன்பாகப் பழகுவதைப் போல **பாசாங்கு** செய்து மாணவர்கள் அனைவரையும் தன் வலையில் விழ வைத்தான். தன்னுடைய பேச்சுத்திறமையால் *உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசி* வகுப்பு மாணவர்களை மயக்கினான். மேலும், வகுப்பு மாணவர்களுக்கு அவ்வப்போது தின்பண்டங்களையும் **துரித** உணவுகளையும் வாங்கி கொடுத்துத் *தன் வசம் ஈர்த்தான்.* வகுப்புத் தலைவனாகத் தன்னைத் தேர்ந்தெடுத்தால் இதே போன்று அன்றாடம் வாங்கி தருவதாக ஆசை காட்டி எல்லோரையும் நம்பவைத்தான். ராகவன் தலைமை பதவிக்குச் சற்றும் பொருத்தமில்லாதவன் என்ற உண்மையை அவர்கள் அப்போது அறியவில்லை. *வெளுத்ததெல்லாம் பால்* என்று அவனுடைய வார்த்தைகளை நம்பி அவனை வகுப்புத் தலைவனாகத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தனர்.

ஒரு நாள் வகுப்பாசிரியர் வகுப்புத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தருணம் வந்துவிட்டது என்று அறிவித்தார். ஆசிரியர் வகுப்புத் தலைவராக மோகனை **முன்மொழி**ந்தார். மோகன் எல்லா வீட்டுப்பாடங்களையும் பொறுப்புடன் சரிவரச் செய்து முடிப்பதனாலும் எல்லோரிடத்திலும் ஒழுக்கமாகவும் பண்பாகவும் பழகுவதால் இந்தத் தலைமை பதவிக்கு மோகன் சிறந்த தேர்வு என்று அவர் கூறினார். பின்னர், வகுப்பு மாணவர்களின் எண்ணத்தைத் தெரிந்து கொள்ள அவர்களின் **பரிந்துரை**யைக் கேட்கலானார். ராகவனின் *ஆசை வலையில் சிக்குண்ட* மாணவர்கள் ராகவனே வகுப்புத் தலைவராக வேண்டும் என்று **ஆமோதித்தனர்**. இன்னும் சிலர் மோகனைத் தேர்ந்தெடுத்தப்படியால் ஆசிரியர் **ஓட்டு முறை**யை அறிமுகப்படுத்தினார். **ஓட்டு விகிதத்தில்** ராகவன் வெற்றி பெற்றதால் தலைமை பொறுப்பு ராகவனுக்குக் கிட்டியது.

ராகவன் வகுப்பு தலைவனானதும் அவன் செய்வதாய் கூறியவை அனைத்தும் *நீர் மேல் எழுத்து போல* ஆகின. பதவி கிடைத்ததும் சக மாணவர்களை **அதட்டு**வதும் கட்டளையிடுவதுமாக இருந்தான். தனக்கு வழங்கப்படும் வேலைகளைத் தன்னுடைய நண்பர்களின் *தலையில் கட்டிவிட்டு* விளையாட சென்றுவிடுவான். மாணவர்கள் அவன் மீது மிகுந்த கோபம் கொண்டிருந்தனர். இதனால், தலைமை பொறுப்புகள் முறையாக நடைபெறாமல் *தங்கு தடைப்பட்டு* நின்றன. இதை எல்லாம் **கண்காணித்த** மோகன் ஆசிரியரிடம் நடப்பவற்றைத் தெரிவித்தான்.

ஆசிரியர் ராகவன் இவ்வாறு *ஏனோ தானோவென்று* இருந்ததை நேரில் கண்டார். *கையும் களவுமாய்* **அகப்பட்ட** ராகவன் இனி இவ்வாறு செய்ய மாட்டேன் என்று **நீலிக்கண்ணீர்** வடித்தான். அவன்மீது நம்பிக்கை இழந்த ஆசிரியர் மீண்டும் ஒரு **வாக்கெடுப்பைத்** தலைமை பதவிக்காக நடத்தினார்.

கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு

என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப செய்யும் செயலும் சொன்ன சொல்லும் வேறாக அமைந்த ராகவனின் போக்கால் அவன்மீதிருந்த நட்பும் நம்பிக்கையும் இழந்த அனைத்து மாணவர்களும் மோகனைத் தேர்ந்தெடுத்து ராகவன் முகத்தில் *கரி பூசினர்.*

பதவியின் மீது கொண்ட பேராசையால் தன்னுடைய நண்பர்களே தன்னை ஒதுக்கி வைத்துவிட்டனரே என்று மனவருத்ததிற்கு ஆளானான். 'ஒப்புக்குச் செய்தால் உள்ளதும் கெடும்' என்ற பழமொழிக்கேற்ப மனமில்லாமல் ஒரு வேலையைச் செய்தால், அது இருப்பதை விட மோசமாகவே அமையும் என்று ஆசிரியர் கற்பித்தது நினைவிற்கு வந்தது. தலைமை பொறுப்பைச் சுமப்பது அவ்வளவு எளிமையான காரியமல்ல; அதற்கான **உத்தரவாதத்தோடும் மனமுவந்தவாறும்** கடமையாற்ற வேண்டும்; இல்லையென்றால் இவ்வாறு **சங்கடத்திற்கு** ஆளாக நேரிடும் என்று புரிந்து கொண்டான். தன் தவற்றை உணர்ந்த ராகவன் அனைவர் முன்னிலையில் தலைகுனிந்தவாறு மன்னிப்புக் கேட்டான்.

**கட்டுரை சிறக்க உதவும் வரிகள் :**

- பேராசை பெரும் வியாதி. இந்த உண்மையை உணர்ந்தவன் வாழ்வில் சுகம் அடைவான் - கௌதம புத்தர்
- தடுமாற்றம், சினம், கவலை, பேராசை நான்கும் வாழ்க்கைக்கு நன்மை தரும் வழிகளை அடைத்துவிடுகின்றன - வேதாத்திரி மகரிஷி
- கடுமையான கஞ்சத்தனம், தகுதியற்ற தற்பெருமை, எல்லையற்ற பேராசை ஆகிய மூன்றும் மனிதனை வீணாக்கும் - நபிகள் நாயகம்
- இந்த உலகில் மனிதனின் தேவைக்குப் போதுமான அளவு வளம் உள்ளது. அவனின் பேராசை அளவுக்கு வளங்கள் இங்கில்லை - மகாத்மா காந்தி
- பேராசை பெருநஷ்டம்
- இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னும்
  துன்பத்துள் துன்பங் கெடின்
  *பொருள் : பெருந்துன்பம் தரக்கூடிய பேராசை ஒழிந்தால் வாழ்வில் இன்பம் விடாமல் தொடரும்*
- கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
  சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு
  *பொருள் : கடமை இவை என்று அறிந்து சான்றான்மை மேற்கொண்டு நடப்பவர்க்கு நல்லவை எல்லாம் இயல்பான கடமை என்று கூறுவர்*

**அருஞ்சொற்பொருள்**

| எண் | அருஞ்சொல் | பொருள் | English Meaning |
|---|---|---|---|
| 1. | பாசாங்கு | நாடகமாடுதல் | Pretend |
| 2. | துரிதம் (துரித) | விரைவு | Fast |
| 3. | முன்மொழிதல் (முன்மொழி) | முதலில் எடுத்துக் கூறுதல் | Propose |
| 4. | பரிந்துரை | ஆலோசனை | Suggestion |
| 5. | ஆமோதித்தல் (ஆமோதித்தனர்) | ஒப்புக்கொள்ளுதல் | Endorsement |
| 6. | ஓட்டு முறை | - | Vote system |
| 7. | ஓட்டு விகிதம் (ஓட்டு விகிதத்தில்) | ஓட்டு சதவிகிதம் | Voting ratio |
| 8. | அதட்டு | பயமுறுத்து | Frighten |
| 9. | கண்காணிப்பு (கண்காணித்த) | கவனிப்பு | Monitor |
| 10. | அகப்படுதல் (அகப்பட்ட) | பிடிப்படுதல் | Caught |
| 11. | நீலிக்கண்ணீர் | பொய்யான அழுகை | Fake tears |
| 12. | வாக்கெடுப்பு (வாக்கெடுப்பை) | - | Referendum |
| 13. | உத்தரவாதம் (உத்தரவாதத்தோடு) | பொறுப்பு | Guarantee |
| 14. | மனமுவந்து (மனமுவந்தவாறு) | முழுமனதோடு | Wholehearted |
| 15. | சங்கடம் (சங்கடத்திற்கு) | கஷ்டம் | Embarrassment |

WORDSMITH
BEYOND LEARNING

**<u>தொகுதி 1 - பயிற்சி 1</u>**

**கீழ்க்கண்ட அருஞ்சொற்பொருள்களுக்குச் சரியான பொருளை எழுதுக.**

| எண் | English Meaning | அருஞ்சொல் |
|---|---|---|
| 3. | | முன்மொழிதல் |
| 5. | | ஆமோதித்தல் |
| 8. | | அதட்டு |
| 10. | | அகப்படுதல் |
| 11. | | நீலிக்கண்ணீர் |
| 13. | | உத்தரவாதம் |
| 15. | | சங்கடம் |
| 7. | | ஓட்டு விகிதம் |
| 9. | | கண்காணிப்பு |
| 2. | | துரிதம் |
| 1. | | பாசாங்கு |
| 6. | | ஓட்டு முறை |
| 4. | | பரிந்துரை |
| 12. | | வாக்கெடுப்பு |
| 14. | | மனமுவந்து |

**பயிற்சி வினா 2**

**கீழ்க்காணும் கருத்துகளை முறையாக விரிவுப்படுத்தி கட்டுரை எழுதவும்.**

**2. நீ மேற்கொண்டுவரும் ஒரு பொழுதுபோக்கினால் விளைந்த நன்மைகளைப் பற்றி விளக்கி எழுதவும்.**

**முன்னுரை**

**பொழுதுபோக்கு என்பது நாம் நம் நேரத்தைப் பயனுள்ள வழியில் கழிக்கும் நடவடிக்கை**

Point 1 : அன்றாடம் செய்யும் **இயந்திர வேலை**களில் இருந்து மாறுபட்டது

- காலை முதல் மாலை வரை செய்யும் வேலைக்குச் சற்று மாறுபட்டு இருத்தல்.
- தினசரி வேலைப்பளுவில் இருந்து ஒரு மாற்றமாக அமையும்.

Point 2 : பலவகை உண்டு

- பொழுதுபோக்குப் பலவகை உண்டு. எடுத்துக்காட்டாக, ஓவியம் வரைதல், **புத்தகம் படித்தல்**, பாடல் கேட்டல் போன்றவை ஆகும்.

Point 3 : நாம் விரும்பிச் செய்யும் ஒன்று

- வேலைகள் பல நமக்குப் பிடிக்காமல் இருக்கலாம்.
- ஆனால், பொழுதுபோக்கு மட்டுமே நமக்குப் பிடித்த செயலாக இருக்கும்.

Point 4 : மனத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்

- நமக்குப் பிடித்தவற்றைச் செய்யும்போது ஒருவித மனத்திருப்தி உண்டாகும்.

Point 5 : **மன உளைச்சலைக்** குறைக்கும்

- பள்ளியின் பாடச்சுமையிலிருந்து ஓய்வாக அமையும்.

Point 6 : எல்லோருக்கும் பொழுதுபோக்கு என்பது கட்டாயம் தேவை

- ____________________________________________________________

____________________________________________________________

**கருத்து 1**

**கைவினைப் பொருட்கள் செய்வதுதான் எனது பொழுதுபோக்கு**

Point 1 : இணையத்தின்வழிப் பார்த்தேன்

- **கைவினைப்** பொருட்கள் செய்வதன் வழிமுறைகளை **வலையொளி**யில் நிறைய கற்றுக்கொண்டேன்.

Point 2 : ஆர்வம் ஏற்பட்டது

- வலையொளியில் **எண்ணிலடங்கா** கைவினைப் பொருட்கள் செய்வதைக் கண்டது மிகுந்த ஆர்வத்தைத் தூண்டியது.
- வலையொளி வழி பலவிதமான கைவினைப் பொருட்களைச் செய்யக் கற்றுக் கொண்டேன்.

Point 3 : **புத்தகக் குறியீடு**கள், சிறு பொம்மைகள், கைவளையல்கள், மேசை அலங்காரப் பொருள்கள் போன்றவற்றைச் செய்வேன்

- அவற்றை இணையம் வாயிலாக விற்றுப் பணம் ஈட்டினேன்.

Point 4 : புதுப்புது பொருட்கள் செய்வதற்கு ஆர்வம் **மேலிட்டது**

- ________________________________________________
  ________________________________________________

## கருத்து 2

**பயனுள்ள பொழுதுபோக்கால் ஏற்பட்ட மாற்றங்கள்**

Point 1 : நேரம் பயனுள்ள வழியில் கழிந்தது

- கைவினைப் பொருட்களைச் செய்யும்போது நேரத்தைப் பயனுள்ள வழியில் கழிக்க முடிந்தது.
- தேவையில்லாத பழக்கங்களைக் குறைத்துக்கொண்டு நேரத்தை நல்ல வழியில் செலவு செய்தேன்.

Point 2 : **கையடக்கப்பேசி**யில் நேரம் செலவழிப்பது குறைந்தது

- எந்நேரமும் கையடக்கப்பேசியிலேயே நேரத்தைக் கழிப்பதைக் கொஞ்சம் **கொஞ்சமாகக் குறைத்து**க் கொண்டேன்.

Point 3 : நண்பர்களுடன் வீணாகச் சுற்றுவதும், அரட்டை அடிப்பதும் குறைந்தது

- ________________________________________________
  ________________________________________________

## கருத்து 3

**திறன்களைக் கற்றுக் கொள்ள முடிந்தது**

Point 1 : புதிய திறன்களைக் கற்றுக்கொண்டேன்

- இந்த அருமையான பொழுதுபோக்கின் வழி புதிய திறன்களைக் கையாள **வழிகோலாக** அமைந்தது.

Point 2 : கற்பனையாற்றலும், சிந்திக்கும் திறனும் வளர்ந்தது

- கைவினைப் பொருட்கள் செய்யும் போது என்னுடைய **கற்பனையாற்றலும் சிந்திக்கும் திறனும்** வளரத் தொடங்கியது.

Point 3 : என் நண்பர்களையும் ஊக்கப்படுத்தினேன்

- நான் செய்த கைவினைப் பொருட்களை என் நண்பர்களிடம் காட்டி அவர்களையும் ஊக்கப்படுத்தினேன்.

Point 4 : என் குடும்ப உறுப்பினர்கள் எனக்கு உற்சாகம் கொடுத்தார்கள்

- ________________________________________________
  ________________________________________________

WORDSMITH BEYOND LEARNING

| முடிவுரை |
|---|
| **காலம் பொன் போன்றது, போனால் திரும்ப வராது** |

Point 1 : எனவே, நேரத்தைப் பயனுள்ள வழியில் செலவிடுவது மிகவும் முக்கியம்

- ஒருமுறை காலத்தை வீணடித்தால் அதைத் திரும்ப பெறமுடியாது.
- நாம் காலத்தை வீணடிக்கக் கூடாது என்றால் சிறந்த பொழுதுபோக்கை மேற்கொள்வது அவசியம்

Point 2 : பொழுதுபோக்கே சிலருக்கு வாழ்க்கை தொழிலாக அமைந்துவிடுவதும் உண்டு

- இன்று பிரபலமாகத் திகழும் தொழிலதிபர்கள் முன்னொரு காலத்தில் பொழுது போக்குக்காகச் சிறுசிறு வணிகம் செய்தவர்களே.

Point 3 : பொழுதுபோக்கை மேற்கொள்வது நம் எதிர்காலத்தை **ஒளிமயமாக்கும்** என்பது திண்ணம்

- ______________________________________________________________

______________________________________________________________

**தொகுதி 1 - பயிற்சி 2**

**சரியான வாக்கியத்தைத் தேர்வுசெய்து மேற்காணும் கோடிட்ட பகுதிகளை நிரப்பவும்.**

1. கூடா நட்பு மற்றும் பயனற்றச் செயல்களின் பிடியில் சிக்க வாய்ப்பில்லை.
2. பொழுதுபோக்கு நமது வாழ்க்கை தொழிலாகக் கூட உருவெடுக்கலாம்.
3. ஓய்வு நேரத்தைப் பொறுத்து ஒவ்வொருவருடைய பொழுதுபோக்கும் வேறுபடும்.
4. தேடல்களை அதிகப்படுத்தி எனது திறமையை மெருகூட்டிக்கொண்டேன்.
5. அனைவரிடமும் இருந்து கிடைத்த பேராதரவால் புத்துணர்ச்சி ஏற்பட்டது.

**கட்டுரை சிறக்க உதவும் வரிகள்** :

- கைப்பேசியிலேயே மூழ்கி இருக்கிறார்கள் - *இன்றைய இளம் தலைமுறையினர் கைப்பேசியிலேயே மூழ்கி இருக்கிறார்கள். ஒரு மணி நேரம்கூட கைப்பேசி இன்றி வாழ முடியாது எனக் கூறும் அளவுக்கு அடிமையாகி விட்டார்கள். இதில் நான் மட்டும் விதிவிலக்கா? ஆனால், எனக்கென்று ஒரு பொழுதுபோக்கை வழக்கமாக்கிய பின்னர் நான் அதன் மோகத்திலிருந்து விடுபட்டேன்.*
- காலை எழுந்தவுடன் படிப்பு<br>பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு<br>மாலை முழுதும் விளையாட்டு<br>என்று வழக்கப்படுத்திக்கொள்ளு பாப்பா
- கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்
- ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு - *விடாமுயற்சியோடு செயல்படுவது வாழ்க்கையை வளப்படுத்தும்.*
- குன்றின்மேல் இருக்கும் தீபம்போல் - ______________________________

______________________________________________________________

**அருஞ்சொற்பொருள்**

| எண் | அருஞ்சொல் | பொருள் | English Meaning |
|---|---|---|---|
| 1. | இயந்திர வேலை | உணர்ச்சி இல்லாமல் செய்யப்படும் வேலை | Machinery Work |
| 2. | மன உளைச்சல் (மன உளைச்சலை) | மன அழுத்தம் | Stress |
| 3. | கைவினை | கையால் செய்யப்படும் பொருள் | Handcraft |
| 4. | வலையொளி | காணொளி அகப்பக்கம் | Youtube |
| 5. | எண்ணிலடங்கா | எண்ண முடியாத அளவு | Uncountable |
| 6. | புத்தகக் குறியீடு | - | Bookmark |
| 7. | மேலிடுதல் (மேலிட்டது) | அதிகமானது | Increased |
| 8. | கையடக்கப்பேசி | கைபேசி | Handphone |
| 9. | வழிகோல் (வழிகோலாக) | வழிகாட்டி | Guidance |
| 10. | கற்பனையாற்றல் (கற்பனையாற்றலும்) | யோசிக்கும் திறன் | Imagination skill |
| 11. | ஒளிமயம் (ஒளிமயமாக்கும்) | பிரகாசம் | Shine |

**<u>பயிற்சி வினா 3</u>**

**கீழ்க்காணும் வினா**விற்கு உதவி குறிப்புக்கட்டுரையின் **(Hint Compo) துணையோடு கட்டுரை எழுதவும்**.

**3.** ***“அப்பா, தாத்தாவும் பாட்டியும் நம்முடனே இருக்கட்டுமே! அவர்கள் இந்தியாவில் தன்னந்தனியாக எப்படி வாழ்வார்கள்?” என்று கேட்கும்போது என்னை அறியாமலே கண்கள் குளமாகின. அவர்களுடன் கழிந்த இந்த ஒரு மாத கால விடுமுறைதான் என் வாழ்க்கையிலேயே இனிமையான தருணங்கள் எனலாம். . . . .***

**முன்னுரை**

- தாத்தா, பாட்டி வரவால் இயல்பு வாழ்க்கையில் இனிமையான மாற்றம்
- பாசமழையைப் பொழிந்தார்கள்
- எல்லையில்லா அன்பும் அக்கறையும் புதிய உறவால் கிடைத்தது

**இடையுரை**

- மறக்க முடியாத **தருணம்** என்றால் சிங்கையில் நடைபெற்ற ஓவியப் போட்டியில் நான் முதல் பரிசு **வென்றது**
- ஓவிய **வித்தகரான** என் தாத்தாவிடமிருந்து ஓவியம் கற்றுக் கொண்டேன்
- எனக்கு முதல் பரிசு கிடைத்தது
- முதல் பரிசை வென்றதால் பாட்டி எனக்குப் பிடித்தமான **ஆகாரத்தைச்** செய்து கொடுத்தார்
- பாட்டி செய்த ஆகாரங்களை எல்லாம் இதுவரை சிங்கையில் சுவைத்தது இல்லை
- நான் பாட்டியிடம் சமையலின் **செய்முறை** இரகசியத்தைக் கேட்டேன்
- தோட்டத்தில் **பயிரிட்ட** காய்கறிகளைக் கொண்டு சமைத்ததாகக் கூறினார்
- இதுபோன்ற உணவுகளை நானும் இங்குத் தொடர்ந்து சாப்பிட வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும் என்று பாட்டியிடம் கேட்டேன்
- சுயமாகக் காய்கறிகளைப் பயிரிட்டால் **இரசாயன கலப்படம்** இல்லாமல் காய்கறிகள் சுவையாக இருக்கும்; சமையலும் சுவைக்கும் என்றார்

- பாட்டி சொல்லைத் தட்டாதே
- எங்கள் இல்லத்தில் இருந்த தோட்டத்தில் கத்திரிக்காய், தக்காளி, **குடைமிளகாய்** போன்ற செடிகளைப் பயிரிட்டோம்
- நானும் தாத்தா பாட்டியோடு சேர்ந்து காய்கறிகளைப் பயிரிடக் கற்றுக் கொண்டேன்
- அவர்களோடு சேர்ந்து ஒன்றாக உணவுகளையும் சமைத்தேன்
- இதுவரை நான் கற்காத பல திறன்களைத் தாத்தா பாட்டி மூலம் கற்றேன்
- அவர்கள் மீண்டும் இந்தியாவிற்குச் செல்வதில் எனக்குத் துயரம்
- ஆனால், தாத்தா பாட்டியோ அவர்கள் பிறந்து வளர்ந்த ஊரை விட்டு இங்குத் தங்குவது சிரமம் என்றனர்
- கனத்த மனதுடன் வழியனுப்பினேன்
- அடுத்த விடுமுறைக்காக *வழி மேல் விழி வைத்து* காத்துக் கொண்டு இருக்கிறேன்

**முடிவுரை**

- தாத்தா பாட்டி உறவு *தாமரை இலை தண்ணீர் போல* ஒட்டாமல் போனதால்தான் இன்றைய இளைஞர்களுக்குப் பல நெறிகள் தெரியாமல் இருக்கிறது
- சொந்த பந்தங்கள் இன்றி தனி மரமாக வாழ்கிறார்கள்
- தாத்தா பாட்டி உறவின் **மகிமை**யை உணர்ந்திட தவறுகிறார்கள்

**கட்டுரை சிறக்க உதவும் வரிகள் :**

- நேரத்திற்குப் பின்னால் ஓடுகிறார்கள் - *நாம் அனைவரும் நேரத்திற்குப் பின்னால் ஓடுவதிலேயே மட்டும் குறியாக இருப்பதால்தான் தாத்தா பாட்டியோடு நேரத்தைச் செலவிடுவதை மறந்து விடுகிறோம்.*
- கால்களில் சக்கரம் கட்டியது போல - பொருள்: விரைவாக
- சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல் - பொருள்: *உறவினரோடு கூடி வாழ்வதே சிறப்பாகும்.*
- நகமும் சதையும் போல - பொருள்: *மிகவும் நெருக்கமாக, இணைப் பிரியாமல் இருப்பது*
- மகிழ்ச்சி வெள்ளத்தில் **திளைத்தேன்** - ____________________

____________________

**அருஞ்சொற்பொருள்**

| எண் | அருஞ்சொல் | பொருள் | English Meaning |
|---|---|---|---|
| 1. | பொழிதல் (பொழிந்தார்) | கொட்டுதல் | Shower |
| 2. | தருணம் | நேரம் | Moment |
| 3. | வெல்லுதல் (வென்றது) | வெற்றி பெறுதல் | Won |
| 4. | வித்தகர் (வித்தகரான) | திறமைசாலி | Talented |
| 5. | ஆகாரம் (ஆகாரத்தை) | உணவு | Food |
| 6. | செய்முறை | மேற்கொள்ளும் முறை | Method |
| 7. | பயிரிட்ட | நட்ட | Planted |
| 8. | இரசாயன | - | Chemical |
| 9. | கலப்படம் | - | Admixture |
| 10. | குடைமிளகாய் | ஒரு வகை காய்கறி | Capsicum |
| 11. | மகிமை | அருமை | Greatness |
| 12. | திளைத்தல் (திளைத்தேன்) | மூழ்குதல் | Soaked |

# வேர்ட்ஸ்மித் சிகரம்

# மின்னஞ்சல் வினாக்கள்

**<u>மின்னஞ்சல் 1</u>**

**அறிவுரை கூறுதல் - பொதுப் போக்குவரத்து**

**பின்வரும் தலைப்பைப் படித்து அதற்கேற்ற பதிலை மின்னஞ்சலாக எழுதவும்.**

விரைவு இரயில் மூன்று நிமிடங்கள் தாமதமாக வந்தடைந்ததால் பள்ளிக்குக் குறித்த நேரத்தில் வரமுடியவில்லையென உனது தோழி குறைப்பட்டுக்கொள்கிறாள். தாமதமாக நிலையத்தை வந்தடைந்துவிட்டு பொதுப் போக்குவரத்தை நம்பவே முடியவில்லை எனத் தோழி குறைக் கூறியதை உன்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சிங்கப்பூர் பொதுப் போக்குவரத்து வசதிகளின் மகிமையை விவரித்து, அறிவுரை கூறி உனது தோழிக்கு மின்னஞ்சல் அனுப்புக.

**<u>மின்னஞ்சல் 2</u>**

**வழிகாட்டுதல் - வெளிநாட்டு மாணவர் வருகை**

**பின்வரும் மின்னஞ்சலைப் படித்து அதற்கு ஏற்ற விடையெழுதுக.**

| File | Edit | View | Tools | Message | Help |
|---|---|---|---|---|---|
| பொருள் | : | வழிகாட்டல் தேவை | | | |
| தேதி | : | 04/01/2022 | | | |

அன்புள்ள அருண்

நாங்கள் இங்கு நலம். நீயும் உன் குடும்பத்தினரும் எப்படி இருக்கிறீர்கள்? நாங்கள் சிங்கப்பூரில் குடியேறி ஒரு வாரம் ஆகிவிட்டது.

நண்பா, அடுத்த வாரம் நானும் உன்னுடைய பள்ளியில் பதியவிருக்கிறேன். பள்ளியில் இணைவதற்கு முன் என்னென்ன முன்னேற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்று பகிர்ந்து கொண்டால் உதவியாக இருக்கும். தமிழ் நாட்டு கல்வி முறைக்கும் சிங்கப்பூர் கல்வி முறைக்கும் பல்வேறு வேறுபாடுகள் இருப்பதை நான் அறிவேன். இங்கு நடைபெறும் அறிமுக வாரம், கட்டாய தாய்மொழி பாடம் மற்றும் இணைப்பாட நடவடிக்கைகளைப் பற்றி சற்று விளக்கிக் கூறினால் அதற்கேற்றவாறு நான் என்னைத் தயார்ப்படுத்திக் கொள்வேன். அடுத்த வாரம் பள்ளியில் உன்னைச் சந்திக்க ஆவலாகக் காத்திருக்கிறேன்.

இப்படிக்கு

அகிலன்

WORDSMITH BEYOND LEARNING
EQ SKILLS = JUMP GRADES + achieve BIG

## வேர்ட்ஸ்மித் சிகரம் விடைத்தாள்

**SECONDARY 2 - BEST MODEL COMPO & EMAIL WRITING PRACTISE TO JUMP GRADE**
**உயர்நிலை 2 - சிறப்புத் தேர்ச்சிக்கான தேர்வுத் தலைப்பையொட்டிய கட்டுரை & மின்னஞ்சல் மாதிரிகளோடு பயிற்சிகள்**

**தொகுதி 1 - பயிற்சி 1**

| எண் | English Meaning | அருஞ்சொல் |
|---|---|---|
| 3. | Propose | முன்மொழிதல் |
| 5. | Endorsement | ஆமோதித்தல் |
| 8. | Frighten | அதட்டு |
| 10. | Caught | அகப்படுதல் |
| 11. | Fake tears | நீலிக்கண்ணீர் |
| 13. | Guarantee | உத்தரவாதம் |
| 15. | Embarrassment | சங்கடம் |
| 7. | Voting ratio | ஓட்டு விகிதம் |
| 9. | Monitor | கண்காணிப்பு |
| 2. | Fast | துரிதம் |
| 1. | Pretend | பாசாங்கு |
| 6. | Vote system | ஓட்டு முறை |
| 4. | Suggestion | பரிந்துரை |
| 12. | Referendum | வாக்கெடுப்பு |
| 14. | Wholehearted | மனமுவந்து |

**தொகுதி 1 - பயிற்சி 2**

| | | |
|---|---|---|
| முன்னுரை | ஓய்வு நேரத்தைப் பொறுத்து ஒவ்வொருவருடைய பொழுதுபோக்கும் வேறுபடும். | 3 |
| கருத்து 1 | தேடல்களை அதிகப்படுத்தி எனது திறமையை மெருகூட்டிக்கொண்டேன். | 4 |
| கருத்து 2 | கூடா நட்பு மற்றும் பயனற்ற செயல்களின் பிடியில் சிக்க வாய்ப்பில்லை. | 1 |
| கருத்து 3 | அனைவரிடமும் இருந்து கிடைத்த பேராதரவால் புத்துணர்ச்சி ஏற்பட்டது. | 5 |
| முடிவுரை | பொழுதுபோக்கு நமது வாழ்க்கை தொழிலாகக் கூட உருவெடுக்கலாம். | 2 |

# வேர்ட்ஸ்மித் சிகரம்

# மின்னஞ்சல் விடைகள்

வேர்ட்ஸ்மித் சிகரம்

# மின்னஞ்சல் விடைத்தாள்

**<u>மின்னஞ்சல் 1</u>**

**அறிவுரை கூறுதல் - பொதுப் போக்குவரத்து**

| File | Edit | View | Tools | Message | Help |
|---|---|---|---|---|---|
| பொருள் | : | அறிவுரை கூறுதல் | | | |
| தேதி | : | 08/01/2021 | | | |

அன்புள்ள புவனாவுக்கு

நான் இங்கு நலம். நீ நலமா? நேற்று நீ தாமதமாகப் பள்ளிக்கு வந்ததை எண்ணி அதிக மன உளைச்சலுடன் காணப்பட்டாய். இணைப்பாட நடவடிக்கைக்குத் நேரமாகிவிட்டதால் உன்னிடம் அதிகம் பேச இயலவில்லை. ஆகவே, உன்னிடம் சில **பற்றியங்களை** அறிவுறுத்தவே இந்த மின்னஞ்சலை எழுதுகிறேன்.

நீ எப்பொழுதும் உன் தந்தையுடன் பள்ளிக்கு வருவதால் உனக்கு நம் பொதுப் போக்குவரத்து நடைமுறை பற்றி **பரிச்சயம்** ஏற்படவில்லை. நேற்று தண்டவாள மேம்பாட்டுப் பணிகள் (Maintenance) நிகழவிருப்பதைக் குறித்து முன்பே சிங்கப்பூர் பொதுப் போக்குவரத்து சமூக வலைத்தள பக்கங்களில் அறிவிப்பு செய்யப்பட்டிருந்ததை நீ கவனிக்கத் தவறிவிட்டாய். இங்குள்ள பெருவிரைவு இரயில் குறிப்பிட்ட நேரத்திற்குச் சரியாக இயங்கும் தன்மையுடையது. மூன்று நிமிடங்களுக்கு ஒரு முறை *அலாரம் அடித்தது போல்* சரியான நேரத்திற்கு நிறுத்தத்திற்குள் நுழைந்துவிடும். ஆகையால், ***கிணற்றுத் தவளையாக*** இருந்துவிடாமல் இங்குள்ள பொதுப் போக்குவரத்து நடைமுறைகளைப் பற்றி அறிந்து வைத்துக் கொள்வது உனக்குப் பயனுள்ளதாக அமையும்.

நேற்று நீ சற்று தாமதாக எழுந்ததாகக் கூறினாய் அல்லவா? *காலம் போனால் திரும்பாது* என்பதையுணர்ந்து நீ சிறிது நேரத்திற்கு முன்பே இரயில் நிறுத்தத்தை அடைந்திருக்க வேண்டும். பொறுமையுடன் பயணத்திட்டம் தீட்டி நீ சிறிது நேரத்திற்கு முன்பே புறப்பட்டிருந்தால் அப்பெருவிரைவு இரயிலைத் தவற விட்டிருக்க மாட்டாய். ஆசிரியரும் உன்னைக் கண்டித்திருக்க மாட்டார். '<u>ஆடமாட்டாதவள் கூடம் கோணல் என்றாளாம்</u>' என்பதுபோல உன்னுடைய தாமதத்தினால் பார் போற்றும் நமது போக்குவரத்துச் சேவையைக் குறைக்கூறுவது கிஞ்சிற்றும் சரியல்ல.

புவனா, நம்முடைய நாடு உயர்தரப் போக்குவரத்து சேவையைக் கொண்டுள்ளது. பெருவிரைவு இரயில், பேருந்து ஆகியவற்றில் முதல் தரச் சேவையை நம்முடைய பொதுப் போக்குவரத்துத் துறை **நல்குகிறது** என்றால் மிகையாகாது. நான் பல நாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கிறேன் என்பது நீ அறிந்த ஒன்றே. சில நாடுகளில் கதவு, **இரண்டடுக்கு தள இருக்கை** வசதி, கட்டணம் செலுத்தும் இயந்திரம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகள் கூட இல்லாமல் பொதுப் போக்குவரத்துகள் இயங்குவதை நான் கண்டிருக்கிறேன். அவ்வகையில், பல நாடுகளின் போக்குவரத்து சேவையை ஒப்பிடுகையில் நம் அரசாங்கம் வழங்கும் சேவையானது உயர்தரமிக்கது என்பதை நான் பெருமிதத்துடன் கூறுவேன்.

நம் நாடு உலகிலேயே சிறந்த போக்குவரத்துக் கட்டமைப்பை ஒருங்கே பெற்றுள்ளது. **மின்னிலக்கப் பயண அட்டைகள்**, கண்காணிப்புக் கேமராக்கள், குளிர்சாதனம், மாற்றுத்திறனாளிகளுக்கான சலுகைகள் என்று பெருவிரைவு இரயில் மட்டுமின்றி பேருந்து சேவையும் நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மேம்படுத்தப்பட்டுள்ளது. பேருந்து நிறுத்தங்களில் பேருந்து வருவதற்கு முன்னே அதைப் பற்றிய அறிவிப்புகள் வழங்கப்படுகின்றன. இதற்காகச் சில செயலிகளும் தற்போது பயன்பாட்டில் உள்ளன. அச்செயலிகளின் இணைப்புகளை உனக்குப் பகிர்கிறேன். அவை நிச்சயம் உனக்குக் கைக்கொடுக்கும் என நம்புகிறேன். அதுமட்டுமல்ல, நம் நாட்டில் அதிகாலையில் ஆரம்பித்து நள்ளிரவு வரை இப்பயணச் சேவைகள் வழங்கப்படுகின்றன என்பதையும் நீ அறிவாய் அல்லவா?

என்னுடைய பகிர்வுகளின் மூலம் நம்முடைய அதிநவீன பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பற்றிய துல்லியமான தெரிவல்கள் உனக்குப் புலப்பட்டிருக்கும் என்று நம்புகிறேன். நாளை பள்ளிக்கு இருவரும் சேர்ந்தே பெருவிரைவு இரயிலில் பயணிக்கலாமா என்பதை மின்னஞ்சல் வழி பகிர்ந்து கொள். பதில் மின்னஞ்சலுக்காகக் காத்திருக்கிறேன்.

இப்படிக்கு

கலா

**அருஞ்சொற்பொருள்**

| எண் | அருஞ்சொல் | பொருள் | English Meaning |
|---|---|---|---|
| 1. | பற்றியம் (பற்றியங்களை) | தகவல் | Information |
| 2. | பரிச்சயம் | தெரிந்த ஒன்று | Familiarity |
| 3. | நல்குதல் (நல்குகிறது) | வழங்குதல் | Fulfil the needs |
| 4. | இரண்டடுக்குத் தள இருக்கை | - | Double decker |
| 5. | மின்னிலக்கப் பயண அட்டை | பயணம் செய்வதற்கான சலுகை அட்டை | Ez-link card |

**<u>மின்னஞ்சல் 2</u>**

**வழிகாட்டுதல் - வெளிநாட்டு மாணவர் வருகை**

| File | Edit | View | Tools | Message | Help |
|---|---|---|---|---|---|

பொருள் : வழிகாட்டுதல்

தேதி : 05/01/2022

அன்புள்ள அகிலன்

நாங்கள் அனைவரும் நலம். நீ என்னுடைய பள்ளியில் சேர்ந்திருப்பது குறித்து அப்பா என்னிடம் தெரிவித்தார். மிக்க மகிழ்ச்சி, நண்பா. இனிமேல் இணைந்தே பள்ளிக்குச் செல்வோம் என்பதை நினைக்கையில் உற்சாகமாக இருக்கிறது. நீ சிங்கப்பூர் கல்வி முறையைப் பற்றிய தகவல்களைக் கேட்டிருந்தாய். நான் கூறும் தகவல்கள் உனக்கு நிச்சயம் பயனளிக்கும் என்று நம்புகிறேன்.

சிங்கப்பூர் பள்ளிகளில் பள்ளிச் சீருடை, புத்தகங்கள் ஆகியவை நம் பள்ளியிலேயே வழங்கப்படும். மாணவர் அறிமுக வாரத்தில் பள்ளியின் பாடத்திட்டம், நடைமுறை, இணைப்பாடம், கட்டொழுங்கு குறித்த விரிவான விளக்கம் தரப்படும், அகிலன். அஃது உனக்குப் பள்ளியைப் பற்றிய தெள்ளத் தெளிவான சூழலை எடுத்துரைப்பது மட்டுமின்றி, இச்சூழலுக்குத் தகுந்தவாறு நீ உன்னைப் பழக்கிக் கொள்ளவும் ஏற்புடையதாக அமையும் எனப் பெரிதும் எதிர்பார்க்கின்றேன். நண்பா, சிங்கப்பூரின் கல்விமுறை **போட்டித்தன்மை**